TCAV **TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA**

**விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா**

# Messenger
# தூதுவன்

கிறிஸ்துமஸ் வெளியீடு | December 2017



*With Best Compliments from*

# PERPETUA MONEY TRANSFER

**WorldWide**

## We Guarantee the best rate for

## SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE



- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVENIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

## Send Money to any Bank in Sri Lanka

**Direct Deposit**

Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478
Email: pmoneytransfer@ymail.com

# அருட்தந்தையின் ஆசி !!!



"பூவுலகத்தில் மாந்தர்களே
புன்னகையோடு வாழுங்கள்
புதுவாழ்வு அளித்திட
புதுநாயகன் வருகின்றார்.
இதய வேள்வியில்
இனிமையை நிரப்பிட - உறவை
மேன்மைப் படுத்திட வாருங்கள்
உண்மையை நேசித்த - இறை
உறவை வரவேற்றிட
உரிமையோடு வாருங்கள்"

புனித லூக்கா தனது நற்செய்தி நூலில் (2:8-20) விவரிக்கின்ற முதல் கிறிஸ்மஸ் நிகழ்வில், நாம் இன்று கற்பனை செய்வது போல் கொட்டும் பனியோ, அலங்கார விளக்குகளோ இல்லை. மாறாக வயல்வெளியில் தங்களின் ஆடுமாடுகளைக் காவல் காத்துக் கொண்டிருந்த ஏழை எளிய இடையர்களுக்கு, அதுவும் சமூகத்தில் எந்த உயரிய நிலையிலும் இல்லாத கடைநிலை மக்களுக்கு தான் உலகின் அதிமுக்கியமான கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி கொடுக்கப்பட்டது.

இதுவரை தனது அறிவிப்பு களையும் இறைவாக்கினர்கள் மூலமே அளித்து வந்த கடவுள், இந்த முக்கிய நிகழ்வை மட்டும் தன் வானதூதர்களை நேரடியாக அனுப்பி அறிவிக்கிறார்..

வானதூதர்கள் அவர்களிடம் 'அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக் கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்' (லூக்கா2:10-11). பல நூற்றாண்டுகளாகக் காத்திருந்த மெசியா என்னும் மீட்பர் இன்று பிறந்துவிட்டார், இக்குழந்தை அனைவருக்கும் மீட்பை அளிக்க உள்ளது. 'உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக' என்ற வாழ்த்துச் செய்தி வானதூதர்களால் வழங்கப்பட்டது. இயேசுவை தம் சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்ட நம் அனைவருக்கும் இந்த அமைதி உரித்தானது. இப்பிறப்பின் மூலம் ஆதிபெற்றோர்களால் விலகி இருந்த நாம் மீண்டும் அவரில் இணைக்கப்பெற்றோம்.

கிறிஸ்மஸ் செய்தி என்பது அனைவருக்கும் பகிரப்படவேண்டிய ஒன்றாகும். வானதூதர்கள் தங்களுக்கு செய்திகளை இடையர்கள் எவ்வாறு பிறரோடு பகிர்ந்து கொண்டார்களோ, அதே போலவே நாமும் அன்பை பகிர்வதின் மூலமும், உறவுகளை மேம்படுத்துவதின் மூலமும் இறையரசை உலகிற்கு எடுத்துரைக்க கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு இயேசுவின் அன்பை பிறரோடு பகிர்வதின் மூலம் மீண்டும் இயேசுவை நாம் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவில் உணரமுடியும்.

கிறிஸ்து பிறப்பு வெளியீடினை பார்வையிடும் உங்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மடல் சிறப்பாக அமைய தங்களின் படைப்புகளைத் தந்து ஊக்கமளித்த அனைத்து எழுத்தாளப் பெருமக்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகள்!

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா மற்றும் புது வருட நல்வாழ்த்துக்கள்!!

என்றும் அன்புடன்,

அருட்தந்தை.
**அந்தோணி ஞானப்பிரகாசம்**

# Christmas Message

"Christmas is the spirit of giving without a thought of getting. It is happiness because we see joy in people.
It is forgetting self and finding time for others.
It is discarding the meaningless and stressing the true values"

Dear TCAV Members,

Well, it is hard to believe that it is already time to say Merry Christmas, Happy Holidays and a Happy New Year.We are a shared community. So, as we celebrate this Christmas season, I hope we will continue to think of our brethren who are facing difficulties in their lives. Let us use this time to reflect and count our blessings. The greatest gift we could exchange this season is to serve one another. May I ask you all to remember our community at this time of year, especially the elderly and those who live alone. My very best wishes go to those who are sick at home or in hospital this Christmas and I wish you a speedy recovery. To all who are spending Christmas away from their native City this year, I wish them a safe journey and happy holidays.

May I wish all of you a

*Merry Christmas and a Happy New Year*



**Tyrone Gnanapragasam**
President
Tamil Catholic Association of Victoria

மனிதர்களை நீ மதிப்பீடு செய்து கொண்டு இருந்தால் ஒருக்காலும் உனக்கு அன்பு செய்ய வாய்ப்பு கிடைக்காது




# THE CHRISTMAS STORY....

St.Lukes 2:1-14

And it came to pass in those days, that there went out a decree from Caesar Augustus, that all the world should be taxed.

(And this taxing was first made when Cyrenius was governor of Syria.)

And all went to be taxed, every one into his own city.

And Joseph also went up from Galilee, out of the city of Nazareth, into Judaea, unto the city of David, which is called Bethlehem; (because he was of the house and lineage of David)

To be taxed with Mary his espoused wife, being great with child.

And so it was, that, while they were there, the days were accomplished that she should be delivered.

And she brought forth her firstborn son, and wrapped him in swaddling clothes, and laid him in a manger; because there was no room for them at the inn.

And there were in the same country shepherds abiding in the field, keeping watch over their flock by night.

And, lo, the angel of the Lord came upon them, and the glory of the Lord shone round about them; and they were so afraid.

And the angel said unto them, Fear not; for, behold, I bring you good tidings of great joy, which shall be to all people.

For unto you is born this day in the city of David a Savior, which is Christ the Lord.

And this shall be a sign unto you; Ye shall find the babe wrapped in swaddling clothes, lying in a manger.

And suddenly there was with the angel a multitude of the heavenly host praising God, and saying,



Glory to God in the highest,
And on earth peace,
Good will toward men.



இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம்.

# Funny!!! But Don't Try This at Home!

*Uncle Tony was walking down the street on Christmas eve when he noticed Larry, a small boy, trying to press the doorbell of a house across the street. However, Larry is very small and the doorbell is too high for him to reach. After watching the boy's efforts for some time, Uncle Tony moved closer to Larry's position. He stepped smartly across the street, walked up behind the little fellow and, placed his hand kindly on the child's shoulder, leaned over and gave the doorbell a solid ring.*

*Crouching down to Larry's level, Uncle Tony smiled benevolently and asked, 'And now what, my little man?'*

*To which Larry replied with a beaming grin,*

*'Now we run!*




*What do you call Santa's annual barn dance?*

*Ho, Ho, Ho Down!*



*Who delivers Christmas presents at the Haunted Opera House?*

*Phantom Claus!*

*What's red & white and red & white and red & white?*

*Santa rolling down a hill!*

*What are snowman's favorite breakfast food?*

*Frosted Flakes.*



*What do snowmen eat for lunch?*

*Icebergers.*

*What do snowmen eat for dinner?*

*Ham Br-r-r-r-r-gers!*

*What do reindeer say before telling you a joke?*

*This one will sleigh you!*



*Why do reindeer wear fur coats?*

*They look silly in polyester.*

*Where do you find reindeer?*

*Depends upon where you leave them.*

*How do sheep greet each other at Christmas?*

*A Merry-Christmas to Ewe!*



*How do cows greet each other at Christmas?*

*Merry-Chrismoooo!*

*How to cats greet each other at Christmas?*

*"A furry merry Christmas & Happy mew year"!*

# X-Mas TongueTwisters

*Frosty froze frequently; furthermore fell on frozen frost freezing his fiddly thumbs.*
*Reindeers ride round and round around a round-a-bout repeatedly ready for a reactive lift off.*
*Santa sat slowly on a soft chair with his sack on his back.*
*Silly snowmen slide with slick scarfs down the slow slope.*
*Rudolph roars with red anger and a red as rose nose.*
*Winter whacks whistley wind.*
*Snowballs simply slowly hit the slick ground unless they hit you sorrowfully.*

## Christmas Quiz

1. What's the name of the period leading up to Christmas?
2. What was the name of John the Baptist's Mother?
3. In which town was Jesus born?
4. How many presents were given in total in the 12 Days of Christmas?
5. Which country did the family escape to?
6. What Angel visited Mary?
7. Who was the 'King of the Jews' who ordered the babies to be killed?
8. Who were first people to visit the baby Jesus?
9. What was Joseph's job?
10. Where did the baby Jesus sleep?
11. How many of Rudolph's eight companions names start with 'D'?
12. Which country did Christmas Trees originate from?

Answers

1. Advent 2. Elizabeth 3. Bethlehem
4.364 5. Egypt 6. Gabriel
7. King Herod 8. Shepherds 9. Carpenter
10. In a Manger 11. Three - Dasher, Dancer and Donner
12. Germany - it was Latvia but it was part of German then!

# SYNERGY'S CURRY COURT

**Srin Lankan Indian Take away and Dine-in**
**We cater for all occasions**
**at most competitive price**

Shop 33, 314-360 Childs Road, Millpark,
At Stables Shopping Centre.
Ph: 03 9437 8000

Trading Hours :
Tue-Sun : 11.30 a.m. - 9 p.m.
Monday Closed



# SYNERGY SPICE

a fully stocked up your one stop
Indian Srilankan Grocery Store
Direct Importers & Wholesalers

**open 7 days**

**Ph : 03 9404 4488**

at Millpark
Shop 45, 314-360 Childs Road, Millpark
at Stables Shopping Centre

at Delahey
Shop 1/350 Taylors Road,
Delahey, Ph. (03) 9364 5844

மனிதர்களை நீ மதிப்பீடு செய்து கொண்டு இருந்தால் ஒருக்காலும் உனக்கு அன்பு செய்ய வாய்ப்பு கிடைக்காது

# ONE MINUTE PLZ ...



காலையில் பால்கனியில் அமர்ந்து பைபிள் வாசித்துக் கொண்டிருந்த தந்தையின் அருகில் கையில் காஃபியுடன் வந்தமர்ந்தான் வாலிப மகன். "பரவாயில்லைப்பா... நீங்க டெய்லி பைப்பிள் படிக்கிறீங்க.. நமக்கு தான் டைமே செட் ஆக மாட்டேங்குது" என்றான் வந்தமர்ந்தவன். "நேராத்தை உருவாக்கி படிக்கணும்பா.. அதான் நமக்கு எனர்ஜி தரும்" அப்பா சொன்னார். "உண்மைதான்பா.. மறந்து போயிடறேன்" சிரித்துக் கொண்டே சொன்னான் மகன். "சரி அதிருக்கட்டும்... உன் போன் எங்கே?" "சார்ஜ்ர்ல இருக்குப்பா... நைட் போட்டு வெச்சேன்.. இல்லேன்னா சார்ஜ் இருக்காது" மகன் சொன்னான். "சார்ஜ் இல்லேன்னா என்னப்பா.. போன் இருக்குல்ல"... "ஜோக் அடிக்காதீங்கப்பா... சார்ஜ் இல்லேன்னா அந்த போன்ல எந்த பயனும் இல்லை". "அப்படித் தாம்பா நம்ம வாழ்க்கையும், எப்படி மொபைல் போன்ல சார்ஜ் தினசரி தேவைப்படுதோ அதே மாதிரி நமது வாழ்க்கைக்கும் இறை வார்த்தைங்கற சார்ஜ் தேவைப்படுகிறது. சார்ஜ் ஏத்தாம போயிட்டா லைஃப் பயனில்லாமல் போயிடும்". "உண்மை தான்பா..பட்... மிஸ் ஆயிடுது" மகன் சொன்னான். "இது மிஸ் கிடையாதுப்பா... இது **SIN**! பாவம். போன்ல சார்ஜ் முழுசா போறதுக்கு முன்னாடி தேடி தேடி சார்ஜ் பண்றே. நைட் போடறே... காலைல செக் பண்றே. அடிக்கடி மெசேஜ் வந்திருக்கான்னு பாத்துக்கறே... அதெல்லாம் மிஸ் ஆகலையே". மகன் அமைதியானான். எது முக்கியம்ன்னு தோணுதோ, அதைத் தான் நாம செய்வோம். எது முக்கியம்ன்னு நாம் முடிவு பண்றோமோ அதுதான் நம் வாழ்க்கையை நிர்ணயிக்கும். கடவுள் தான் முக்கியம்ன்னு நீ முடிவுவெடுத்தா அவரே படிக்க நேரத்தை தருவார். அப்பா சொல்லிக்கொண்டே மகனின் கையிலிருந்த காபியை வாங்கி கொஞ்சம் குடித்து விட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்தார். "ம்ம்.. அம்மாவோட காபியே தனி தான்" என சிரித்துக் கொண்டே அவனுடைய தோளில் தட்டிக் கொடுத்தார். அந்த பைப்பிளை கொடுங்கப்பா.. ஏன்பா? இப்போ டைம் இருக்கா? இப்போ இந்த கணம் இந்த நேரம் அது தான் என் கைல இருக்கு. இப்பவே சார்ஜ் பண்ணலேன்னா ஒரு வேளை நான் சார்ஜ் பண்ண நினைக்கும்போது கரண்டு இருக்குமோ இருக்காதோ, சொல்லிவிட்டு மகன் புன்னகைத்தான். அப்பாவின் கண்களில் நிறைவின் சாயல் தெரிந்தது.

நமது வாழ்க்கையில் சார்ஜ் இருக்கிறதா? அதை அடிக்கடி பரிசோதிக்கிறோமா? போன் சார்ஜ் இல்லை என்பதை கண்டு கொள்ளும் நாம்.. நமது வாழ்க்கையில் உயிர்ப்பு இல்லை என்பதை உணர்கிறோமோ? அது ஆடம்பரமல்ல.. அத்தியாவசியம்! பைபிள் நிராகரிப்புக்கானதல்ல, நிலை வாழ்வுக்கானது.

பதிப்பாசிரியர்
**கமிலஸ்**

# ACES

## Advanced Centre for Educational Services



**Telephone:** 0414 314 577
**Email:** info@acesucceed.com.au
**Website:** http://acesucceed.com.au
**ABN:** 976 604 271 35

@acesucceed
fb.com/acesucceed

**Students are tutored by qualied teachers registered with the Victorian Institute of Teaching**

## What We Oer:

- VCE Tutorial Sessions
- VCE Exam Preparation and Revision Seminars
- One-on-One and Small Group Tutoring for Primary & Secondary Students
- Scholarship Entry Preparation
- Language Coaching
- Online Tutoring
- Any Other Speci c Program Designed to Meet Client Request

**Venue**
**2 Robb Street**
**Reservoir VIC 3073**
**Saturday Classes**
Public Transport
Tram Route 86 - Stop 52
Bus 555,566,567 and 562

**We are proudly a member of**

Australian Tutoring Association

வாழ்க்கையால் நற்செய்தி அறிவி, வார்த்தையால் அல்ல.

## அன்புப் பெற்றோர்களே....




இந்த தலைமுறை விசித்திரமானது.
கையில் கடந்த கால மண்ணையும்
எதிர்கால விதைகளையும் வைத்துக்
கொண்டு உறக்கத்துக்கும் விழிப்புக்கும்
இடையே ஊசலாடுகிறது.
கலீல் ஜிப்ரான்.

நீதிமொழிகள் போன்ற பழைய ஏற்பாட்டு வாழ்வியல் கருத்துக்களை உள்வாங்கிக் கவிதைகளில் வடித்துத் தந்த லெபனான் சொற்சிற்பி அவர். குடும்பங்களில் விதை என்பது வளர் இளம் பருவத்தினர். விதைகள் வீரியம் மிக்கதாக இருந்தால்தான் ஓங்கி வளர்ந்து அடர்ந்த தோப்பாகித் தகுந்த பலன் தரும்.



பசுமை மாறாக் காடுகள் பார்வைக்கும் அழகு, பயனும் பெரிது. புவி வெப்பமாகி ஏற்படும் சூழல் மாறுபாடுகளால் உலகம் அழியாமல் காத்து வரும் மிகப் பெரிய அரண் அது. அங்கே கருவாலி மரங்கள் பசுமையுடன் வனத்தை நிரப்பி இருக்கும். ஏகோர்ன் எனப்படும் கருவாலி விதை மிக உறுதியானது. அது வனத்தில் ஏற்படும் காட்டுத் தீயின் வெப்பத்தில்தான் வெடிக்கும். பின்பு பெருமழை வரும் போதுதான் முளைத்து வான் நோக்கி மரமாக வளருமாம்.

பெற்றோர்களே, நீங்கள் தான் இந்த மரங்கள், திருமணம் என்ற நெருப்பில் தூவப்பட்டு முளைத்தெழுந்து, வேர் விட்டுப் பிரம்மாண்டமாய் வளரும் கருவாலி மரங்கள். அதன் ஏகோர்ன் விதைகள் பிள்ளைகள். உங்கள் பெற்றோர் உங்களுக்கு என்ன நல்லது கொடுத்தார்களோ அதை அழிக்காமல் சிதைக்காமல் உங்கள் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கக் கடமை பட்டிருக்கிறீர்கள். திருமணம் என்ற நெருப்பில் உங்கள் குழந்தைகளை விதைக்கும் முன் அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள், படித்து பெற்ற பட்டங்களை விடப் பண்புகள் முக்கியமானவை என்று. நீங்கள் கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தக் காலத்தில் யாரிடம் போய் "soft skills" பயிற்சிப் பெற்றீர்கள்? குடும்பம் தந்த பயிற்சிகள் அல்லவா அவை? விருந்தினரை வாசல் சென்று வரவேற்றீர்கள். புன்னகையுடன் விருந்தோம்பல் செய்தீர்கள். வீதி வரை சென்று வழி அனுப்பினீர்கள்

இது போன்ற பண்பாடு, கலாச்சாரம், மனிதநேயம், இவையனைத்தும் தலைமுறை தோறும் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று. இவற்றை உங்கள் மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து

அனுப்புங்கள். இவைதான் நிலைத்து நிற்கும் சொத்து என்று மகனுக்குத் தெளிவுபடுத்துங்கள். பணம், பதவி வரும் போது பணிவும் வேண்டும். பணிவிருக்கும் போது துணிவும் வேண்டும்.

உங்கள் மகனுக்கு பெண் பார்க்கிறீர்களா? பெண்ணின் பட்டங்களை விட, அவள் பெற்றோர் தரும் நகை, பணத்தை விட, அவள் சம்பளத்தில் உள்ள அளவில்லா பூஜ்ஜியங்களை விட, அவள் முக அழகையும், கட்டுடல் மேனியையும் விட, அவள் பண்பானவளாக வளர்க்கப்பட்டிருக்கிறாளா என்று பாருங்கள். இல்லை என்றால் உங்கள் மகனை பணம் நகைக்காக நீங்கள் அடகு வைப்பதற்குச் சமம். உங்கள் மகளுக்கு வரன் தேடுகிறீர்கள்? என்ன வேலை? என்ன சம்பாத்தியம்? என்ன உயரம்? தனிக் குடித்தனமா? என்றெல்லாம் பார்ப்பதற்கு முன் பணிவும், துணிவும், பண்பும் இருக்கிறதா என்று பாருங்கள்.

அது போலவே பிள்ளைகளுக்குச் சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் வித்தயாசம் சொல்லிக் கொடுங்கள். "Most people mistake comfort for happiness, that is where we miss our children from being human to human being" வசதிகள் மட்டும் ஒரு போதும் மனிதனை மகிழ்ச்சியாக வைத்திராது. வசதிகள் மட்டும் ஒருபோதும் மனதை திருப்திப் படுத்தாது. வசதிகளுக்கான ஏக்கங்கள் மட்டுமே வளர்ந்து கொண்டே இருக்கும்.

நாம் உண்ணும் உணவே, அறுசுவையாக இருந்தால்தான் சரியான நிறைவான உணவாக இருக்கும். திகட்ட திகட்ட இனிப்பாகப் பிள்ளைகளுக்கு வாழ்க்கையைக் காட்டுவீர்களானால் வாழ்வின் முழுமை தெரியாமல் போய்விடும். பல சமயம் வாழ்க்கை வீணாகிவிடும். பிள்ளைகளுக்கு சில சமயம் முயற்சிக்குப் பின்வரும் தோல்வி அழகானது, சுவாரஸ்யமானது, தோல்வி கற்றுத்தரும் பாடங்கள் நிரந்தரமானது என்று கற்றுக் கொடுங்கள். முயல் வேட்டையில் ஜெயிப்பதைவிட யானை வேட்டையில் தோற்பது நல்லது. அதே சமயம் இல்லறத்தில் தான் தோற்க வேண்டிய தருணங்களும் உண்டு. எப்படி தோல்வியுற வேண்டும்? யாரிடம் தோல்வியுற வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள். இல்லையெனில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாமல் விவகாரத்து நோக்கி திருமணப் பந்தம் செல்லும்.

முந்தைய தலைமுறை மதிப்பீடுகளான கடந்த கால மண்ணின் சத்துக்களை எதிர்கால விதைகளாம் பிள்ளைகளுக்கு இந்தத் தலைமுறையினராம் பெற்றோர்கள் சரியாக ஊட்டினோம் எனில் வாழ்க்கை என்றும் ஊசலாடாமல் அழகாகும், பசுமையாய் சமுகத்தில் பரந்து விரியும்.

கவலைகள் மறந்து, இன்பம் புகுந்து, நண்பர்கள் மற்றும் உறவினரோடு இயேசு பிறந்த நாளை மகிழ்ச்சியாய் கொண்டாட என் இதயம் கனிந்த கிறிஸ்மஸ் மற்றும் புது வருட வாழ்த்துக்கள்...

அன்புடன் : **மிருணாளினி கமிலஸ்**

கண்ணுக்கு தெரிந்த மனிதரை மதிக்காவிட்டால், கண்ணுக்கு தெரியாத கடவுளை மதித்தும் பயன் இல்லை..

# Briget Cabinet Pty Ltd

- Kitchen
- Vanities
- Wardrobes
- Laundries





P : 0451 966 177
E : brigetcabinet@gmail.com
C&/291 Frankston Dandenong Road
Dandenong VIC 3175

# Ranjana Fashion





*Fascinating Shopping for you and your dear ones*



**258 Blackburn Road,**
**Glen Waverley,**
**3150 Victoria, Australia**

M : 0403 114 783 / 0433 334 489
P : 03 9803 3503 | E : leopillaij@hotmail.com

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.





# Jaffna bishop visit





# CRESTON ®
## REAL ESTATE
Change dreams into reality



# Thinking of Selling?

**Would you like : A Free Market Appraisal?**
**A Second Opinion?**
**Sales Advice?**

## Call Ashton Ashokkumar NOW!
## 0405 559 766



Dandenong Central



Metro Village, Dandenong



Dandenong North



Dandenong North

www.crestonrealestate.com.au PH : 03 9792 0042

264 Lonsdale St, Dandenong - 3175

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர் பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

# RICH MAHAL

*The taste that lingers....*



## Restaurant & Asian Groceries

**Rich Mahal Vermont South**

Shop 3, 499, Burwood Highway,
Vermont South Shopping Centre
Vermont South 3133
Victoria, Australia
Phone : 03 9887 7663



**New Branch Detail**

**Riks Mahal Restaurant**

Shop 2/2 - 8 Victor crescent,
Narre Warren, VIC 3805
(03) 97059366

**OPEN 7 DAYS 11.00 AM - 10.00 PM**

**Hopper Night**
**Every Tuesday from 5 pm**

**Rich Mahal**
**Asian Groceries**

Rice Dhall Milk Flour Sugar Spices
DVDs Cds Phone Cards Newspapers

Shop 4, 501, Burwood Highway, Vermont South Shopping Centre
Phone : 9887 7663 Fax : 9802 6658



visit us @www.richmaha.com.au

# Corlam Kitchen

**The Real Taste Of Home Style Cooking**



**OPEN 6 DAYS A WEEK**
11.00am to 10.00pm
(Tuesday - Sunday)
**Home Delivery Available**
Minimum order $ 35.00, Within 2 km radius only,
Others Delivery charges apply
**We cater for all occasions**

**BYO Restaurant** **Eat in & Take Away**

*Original Malaysian Indian Mamak Curry*
*South Indian / Singaporean*
*Nasi Kandar / Tandoori / Sri Lankan*

252, Blackburn Road, Glen Waverley

**Ph: 9802 4111**

www.corlamkitchen.com.au

அடுத்த விளக்கிற்கு ஒளி ஏற்ற உதவுவதால், விளக்கின் ஒளி எவ்வகையிலும் குறைவதேயில்லை.

# திருத்தந்தையின் உரை

## திருப்பலியில் புகைப்படங்கள் எடுப்பது வேண்டாம் - திருத்தந்தை

திருப்பலி வேளையில், தங்களிடம் உள்ள தொலைபேசியைக் கொண்டு புகைப்படம் எடுப்பதில் கவனம் செலுத்துவோரைக் காணும்போது தான் அதிகம் வேதனை அடைவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.



திருப்பலியை மையப்படுத்தி உரை வழங்கிய வேளையில், பலர் தங்கள் கைப்பேசியைக் கொண்டு புகைப்படங்கள் எடுப்பது தனக்கு வேதனை தருகிறது என்று கூறியத் திருத்தந்தை, திருப்பலி ஒரு கேளிக்கை காட்சியல்ல என்று வலியுறுத்திக் கூறினார்.

புகைப்படங்கள் எடுப்பது விசுவாசிகள் மட்டுமல்ல என்றும், அருள்பணியாளர்கள், ஆயர்கள் என்று அனைவரும் இந்த தவறை செய்து வருகின்றனர் என்று கூறிய திருத்தந்தை, இந்தத் தவறை அனைவரும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று விண்ணப்பித்தார்.

திருப்பலியின் நடுவே, பலியாற்றும் அருள்பணியாளர், இதயங்களை மேலே எழுப்புங்கள் என்று சொல்கிறாரே தவிர, தொலைபேசிகளை மேலே எழுப்புங்கள் என்று சொல்வதில்லை என்று சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, திருப்பலி நேரத்தில் ஆண்டவர் மட்டுமே நம் முழு கவனத்தையும் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறிய இச்சொற்கள், தற்போது, சமூக வலைத்தளத்தில் பெருமளவு பகிரப்பட்டு வருகின்றன.

## நமக்குள் பிறக்கும் இறைவனை எவ்வாறு வரவேற்கிறோம்?



இறைவன் மனிதரிடம் நெருங்கி வந்த விழாவின் அருளைப் பெறும் நோக்கில், இவ்விழாவை, அமைதியில் செலவிட பழகுவோம் என அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். மனிதர்களுடன் கொள்ளும் நெருக்கம், அன்பு, தாழ்ச்சி, கனிவு ஆகிய அருள்களை உள்ளடக்கிய கிறிஸ்து பிறப்பின் உண்மை உணர்வைப் பெற ஒவ்வொருவரும் முயல்வோம் என ஞாயிறு மூவேளை செப உரையின்போது அழைப்புவிடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்னை மரியா மற்றும் புனித யோசேப்பு ஆகியோரின் சோர்வையும், மகிழ்வையும் நமக்கு விளக்கும் இடமாக கிறிஸ்மஸ் குடில் உள்ளது என்றார்.

இறைவனை வரவேற்பதில் பெருவிருப்பத்தை வெளிப்படுத்திய அன்னை மரியாவும், இறைவிருப்பத்தை முழு நம்பிக்கையுடனும், தாழ்ச்சியுடனும் ஏற்று அதனைப் பின்பற்றிய புனித யோசேப்பும் அன்பின் மறையுண்மையில் முழுவதுமாக தங்களை ஈடுபடுத்தியவர்கள் என்ற திருத்தந்தை, நமக்குள்ளும் கொடையாக வழங்கப்படும் இறைமகனை நாம் எவ்வாறு வரவேற்கிறோம் என்பது குறித்து சிந்திப்போம் என்றார்.

இயேசுவின் வரவை ஆம் என்று சொல்லி, அன்னை மரியா ஏற்றுக்கொண்டதால், உலகின் தலைவிதியே மாறியது என்பது போல், நாமும் இயேசுவை ஏற்று, அவர் வழியில், நடக்கும்போது, நமக்கும் உலகுக்குமான மீட்பின் திட்டத்தில் ஒத்துழைக்க முடியும் எனவும் கூறினார் திருத்தந்தை.

தன்னால் புரிந்துகொள்ள முடியாதவைகளையும், இறைவனின் துணையோடு புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்ட புனித யோசேப்பின் செயல், இறைவனில் நாம் வைக்கவேண்டிய விசுவாசத்தையும், நம் கீழ்ப்படிதலையும் கற்றுத்தருவதாக உள்ளது என மேலும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# அன்பு, எளிமை வழியாக சான்று பகர்ந்த புன்னகை சகோதரி - இறையடியார் ராணி மேரி முத்திப்பேறு பெற்றவராக அறிவிப்பு



நவ.04,2017. இந்தியாவில், 22 ஆண்டுகளுக்கு முன்னர் கொடூரமாய் குத்திக் கொலைசெய்யப்பட்ட இறையடியார் அருள்சகோதரி, ராணி மேரி வட்டாலில் அவர்கள், நவம்பர் 04, சனிக்கிழமை காலையில் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

மத்திய பிரதேச மாநிலத்தின், இன்டோர் நகரிலுள்ள புனித பவுல் பள்ளி வளாகத்தில், புனிதர்நிலை திருப்பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள், தலைமையேற்று திருப்பலி நிறைவேற்றி, இறையடியார் ராணி மேரி அவர்களை, முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

உதயநகர் ஆலயத்தில் முத்திப்பேறு பெற்ற ராணி மேரி அவர்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் அருள்சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருள்சகோதரி. இறையடியார் ராணி மேரி அவர்கள், 1995ம் ஆண்டு பிப்ரவரி 25ம் தேதி, பேருந்தில் இன்டோர் நகருக்கு பயணம் செய்துகொண்டிருந்த போது. 41 வயது மதிக்கத்தக்க சமந்தார் சிங் என்பவரால், 54 முறைகள் கத்தியால் குத்தப்பட்டு இறந்தார்.


மத்திய பிரதேச மாநிலத்தின் இன்டோர் மறைமாவட்டத்தில், ஏழைகள் மத்தியில், முத்திபேறு பெற்ற ராணி மேரி அவர்கள் ஆற்றிவந்த பணிகளால் எரிச்சலடைந்த சில பண்ணையார்களின் தூண்டுதலால், இவர் கொலைசெய்யப்பட்டார்.

இச்சகோதரியின் குடும்பத்தினர் கொலையாளியான சமந்தார் சிங் அவர்களை மன்னித்து, அவரை அடிக்கடி சிறையில் சென்று சந்தித்துப் பேசியதன் பயனாக. தற்போது சம்மந்தர் சிங் மனம் மாறி. முத்திப்பேறு பெற்ற ராணி மேரி அவர்களின் பக்தராக மாறியுள்ளார். 1954ம் ஆண்டு ஜனவரி 29ம் தேதி கேரளாவின் கொச்சி நகருக்கு அருகிலுள்ள Pulluvazhy என்ற ஊரில் பிறந்த அருள்சகோதரி ராணி மேரி அவர்கள், Kindangoorல் பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் சபையில். 1972ம் ஆண்டில் சேர்ந்து. 1974ம் ஆண்டில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்தார், 1975ம் ஆண்டில் வட இந்தியாவில் Bijnoreல் தனது மறைப்பணியைத் தொடங்கிய இச்சகோதரி, 1992ம் ஆண்டில் உதயநகரில் பணியாற்றச் சென்றார்.

1995ம் ஆண்டு பிப்ரவரி 25ம் தேதி, தனது 54வது வயதில் கொல்லப்பட்டார். சமூக நீதிக்காகக் குரல்கொடுத்த முத்திப்பேறு பெற்ற ராணி மேரி.

தன் அன்பு மற்றும் எளிமை வழியாக. கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்த அருள்சகோதரி இராணி மேரியின் தியாகம். குறிப்பாக இந்திய மண்ணில் விசுவாசம் மற்றும் அமைதியின் விதையாக உள்ளது இரக்கம் நிறைந்தவராக வாழ்ந்த அச்சகோதரியை, 'புன்னகை சகோதரி' என மக்கள் அழைத்து வந்தனர்.

# பால்ய கால நினைவுகள்...



மயிலிறகுகள் குட்டிகள் இடும் என நினைத்துறங்கி, புத்தகங்கள் திறந்து பார்த்த காலைப்பொழுதுகள்.



கை, கால், மூட்டுகளில் கொண்ட அடி, காயங்களில் பேப்பர் கிழித்து,
எச்சில் தொட்டு ஒட்டி கொண்ட சுய வைத்தியங்கள்.

அன்றைய டியூப்லைட் வெளிச்சங்களில், பார்த்து வியந்த சைக்கிள் ஓட்டுனரின் சாகச விளையாட்டுகள். புது சுண்ணாம்பு சுவரின் வாசனைகள்.



கற்கள், புளியங்கொட்டைகள் விளையாட்டு பொருட்களாகி போன வினோதங்கள்.

அதிகாலை நேரத்தில் வாசல்களில், கண் மலர கண்ட அம்மாவின் கைவண்ண கோலங்கள்,

சுகமாய் காற்று, முகம் கடந்து செல்ல. தந்தையுடன் முன் கம்பியில் அமர்ந்து போன சைக்கிள் பயணங்கள் ஆள் உயரமே



ஆனாலும், மிக களிப்பாய் சுற்றி ஆடிய மர ராட்டினங்கள்.

கைகளிலே கர்வமாய், கைகடிகாரங்களாய் சுவைத்து நடந்த கலர் மிட்டாய்கள்.

பெட்ரோம்க்ஸ் வெளிச்சத்தில் தள்ளுவண்டியில் வரும் சோன்பப்படிகள்.

கட்டங்கள் கட்டி விளையாடிய பாண்டி விளையாட்டுகள், ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூ பூக்க வைத்த அற்புத தருணங்கள்.

உடைந்த கலர் கண்ணாடி வளையல்கள்.

மாட்டு வண்டியில் வந்த குடிதண்ணீர்.

மஞ்சளாய் மங்கி எரியும் பல்புகள்.



அவைகள் அனைந்து போகையில், கண் சிமிட்டி எரியும் சிறு சிம்னி விளக்குகள்.

இரவு நேரங்களில் பாட்டில்களில் அடைத்து வெளிச்சம் வர ரசித்த சிறு மின்மினிப் பூச்சிகள்.



அம்மாவின் சேலையில் அறைகள் கட்டி, ஆரஞ்சு பழத்தோலில் அழகு தராசுகள் செய்து விளையாடிய அண்ணாச்சி கடை விளையாட்டுகள்.

ஐந்து காசுக்கு வாங்கிய சினிமா பாட்டு புத்தகங்கள்.

ஆர்வமாய் சேகரித்த கலர் சினிமா பிலிமுகள்.

காலில் மிதித்து சக்கரத்தில் கத்தி தீட்டியவர்.

கலர் பாசிகள் போட்டு ஆரவாரமாய் வந்த அழகு குறவன், குறத்தியர்.

தன் கொம்புகளில் குஞ்சளங்கள் கட்டி வந்த மாடுகள். தோளில் தூக்கி வந்த மயில் காவடிகள். முறம், முற்றம், அரைக்கற்கள், அம்மி குழவிகள். அடுப்பூதும் குழல்கள், உலக்கைகள், பனை வாளிகள், பதனீர் பானங்கள்.

ம்ம்ம்ம்....

இனியும் எத்துனை, எத்துனை அழகானவைகள். வாதங்களும் இருந்ததில்லை, வழக்குகளும் கொள்ளவில்லை, தெளிந்த நீரோடையாய், நிற்சலனமாய், சிறுபிள்ளையாய் தோழியரோடு முழித்திருந்த சிவராத்திரிகளும், மிக மகிழ்ச்சியான தீபாவளிகளும், எல்லாம் இன்று நினைவுகள் ஆன போதும், கடந்து வந்த தருணங்களுக்காய் என் இறையே, என் தலைவா மனம் பொங்கி வழிந்தோடும் மகிழ்ச்சியில் உம்மையே வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.......

சுகன்யா



With Best Compliments from

# JAMES STREET
## MEDICAL CENTRE
## BULK BILING

**Mr. Stephen Sellathurai** CPA.,
**Dr. Anne Sellathurai** M.B.B.S., F.R.A.C.G.P.

11/63 James Street Dandenong VIC 3175 Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924
jsmc_anne@hotmail.com



உனக்கு தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

# நத்தார் அடையாளங்கள் சொல்லும் கிறிஸ்தவ வாழ்க்கை

## 1) கிறிஸ்மஸ் மரங்கள் : (Christmas tree)

எப்போதும் பச்சையாக இருக்கும் கிறிஸ்மஸ் மரம் நாம் நிலைத்து இருக்கும் நித்திய வாழ்வைக் குறிக்கிறது. வானத்தை நோக்கி இருக்கும் கிளைகள் பரலோகத்தில் இருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான நித்திய வாழ்வை எமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இம்மரத்தின் முக்கோணம் பிதா சுதக் பரிசுத்த ஆவி ஆகிய திருத்துவ கடவுளை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துமஸ் காலங்களில் இந்த மரத்தைப் பார்க்கும் போது என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் (யோவான்:15:4) என்ற அருள் வாக்கு நம் நினைவிற்கு வரட்டும்.



## 2) கிறிஸ்மஸ் தாத்தா : (Santa clause)



நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதர் நிக்கோலஸ் நினைவாக தான் கிறிஸ்மஸ் தாத்தாவை நாம் காண்கிறோம். இப் புனிதர் தர்மங்களை பிறருக்குத் தெரியாமல் செய்வதிலும் சிறுவர்களுக்கு பரிசுகள் கொடுப்பதிலும் மிகவும் வல்லவர். நாமும் இறைவரங்களை பிறருடன் பகிர்ந்து வாழ முனைவோம். கிறிஸ்மஸ் தாத்தாவை பார்க்கும் போது மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உயரிய எண்ணத்தை எம்மில் வளர்த்துக் கொள்ளுவோம்.

## 3) கிறிஸ்மஸ் மணி : (Christmas Bells)

கிறிஸ்மஸ் மணிகள் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியின் எதிரொலி. ஆடுகள் வழி தவறி போகும் போது அவைகளை கவனித்து மீட்க கழுத்தில் மணிகள் கட்டப்பட்டு இருக்கும். நல் மேய்ப்பராகிய இறை மகன் இயேசுவும் எம்மை அவர் மந்தையில் சேர அழைக்கிறார். அவர் குரல் கேட்டு இறை சமூகம் ஓடி வருவோமாக. இறைவனுக்கு எப்போதும் நாம் செவிமெடுக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துகிறது இவ் கிறிஸ்மஸ்மணிகள்.



## 4) நட்சத்திரம் : (Stars)



கிழக்கிலே தோன்றிய நட்சத்திரம் மூவிராசாக்களை பாலன் இருந்த இடத்தில் வழி நடத்தியது. என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு. என் பாதைக்கு ஒளியும் அதுவே (திருப்பாடல்கள்:119:105) என்பதை உள்வாங்கி தேவன் நமக்கு வேதத்தில் காட்டும் வழியில் நடக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது இந்த நட்சத்திரங்கள்.

## 5) தோரணங்கள் : (Ornaments)



தோரணங்கள் நம்முடைய ஆசிர்வாதங்களைக் குறிக்கின்றன தோரணங்கள் இல்லாமல் நம் கிறிஸ்மஸ் மரம் முழுமை அடையாதது போல ஆசிர்வாதங்கள் இல்லாமல் நம் வாழ்க்கை முழுமை அடையாது. நாம் பெற்ற செல்வங்கள் யாவும் தேவன் எம்மீது வைத்த அன்பினால் பொழிந்தவை என்பதை உணர்ந்து, தோரணங்களால் கிறிஸ்மஸ் மரத்தை அலங்கரிக்கும் போது, இடைவிடாதும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

## 6) மிட்டாய் கரும்பு : (Candy Cane)



மிட்டாய் கரும்பு இயேசு பாலனை தரிசிக்க சென்ற இடையரின் கோலை வெளிப்படுத்துகிறது. தேவனின் பார்வையில் நாம் ஒவ்வொருவரும் சமம். எனவே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இல்லை என்பதை புலப்படுத்துகிறது. இயேசுவின் பிறப்பு முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்வு. இதை தலைகீழாக வைத்தால் "J" என்ற வடிவம் இயேசி கிறிஸ்துவையும், அதிலுள்ள வெண்மை நிறம் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்ததையும், சிவப்பு நிறம் மனித மீட்புக்காக இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தையும் குறிக்கின்றது.

## 7) தேவ தூதர்கள் (Angels)



தேவ தூதர்கள் தேவனுடைய செய்தியை அறிவிப்பவர்கள், தேவ பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறவர்கள் என்பதை உணர்த்துகிறது.

## 8) கிறிஸ்மஸ் கரோல் (Christmas Carols)




கிறிஸ்மஸ் வாழ்த்து பாடல் இயேசு பாலனை துதித்து பாடின தூதர் கூட்டத்தையும் அவர்கள் பாடலையும் நினைவூட்டுகிறது. கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகளின் உண்மை அர்த்தம், கிறிஸ்து பிறப்பின் சமாதானச் செய்தியை, மகிழ்ச்சியை மக்களுக்கு ஆடிப் பாடி மகிழ்ந்து தெரிவிப்பதாகும்.

## 9) கிறிஸ்மஸ் லைட் & மெழுகுவர்த்தி (Christmas Lights and Candles)



கிறிஸ்மஸ் லைட் & மெழுகுவர்த்தி உலகத்தின் ஒளியாம் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். உலகம் பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் இருளடைந்து காணப்படுகிறது. நாம் அவரிடத்தில் விசுவாசம் வைக்கும் போது நம்மிலுள்ள இருள் அகன்று நாம் உலகத்தின் இருளை நீக்கும் ஜீவ ஒளியாய் பிராகாசிக்க முடியும்.

## 10) முன்னனை (Manger)



முன்னனை தேவ குமாரனின் தாழ்மையின் அவதாரத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. இயேசு மேய்ப்பர் என்பதை அறிவிப்பதுடன் முன்னனை பாலன் நமக்கு ஜீவ அப்பம் என்பதையும் கூறுகிறது. நாமும் இயேசுவின் எளிமையான பிறப்பை மனதில் நிறுத்தி எளிய உள்ளம் பெற்று, அன்புள்ளத்தோடு இப்பாலக பிறப்பை வரவேற்க முனைவோம்.

**நினா டேறியஸ்**



## கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்
## அன்பு உள்ளங்களே ....



பாவக் கறைகளைத் துடைத்தெறிய
ஜேசு பாலகன் மீண்டும் பிறந்து விட்டான்
கைகூடும் மங்கள நன்னாளிதில்
கவலைகள் மறந்து சிரித்திடுவீர்...........

ஏழை எளிய மக்களுக்கு என்றும்
இறைவன் இருக்கிறான் என்று சொல்ல
ஆட்டு மந்தைக் கூட்டத்தின் நடுவே
அழகிய பாலகன் வந்து பிறந்தான் .....

புல்லணை விரும்பிய பாலகன் அவனே
முள்ளினில் கிறீடமும் சுமந்து வந்தான்
இனிவரும் தொல்லைகள் யாவும் நீங்கின என்று
தூயவன் மலர்ப் பாதம் தொழுதிடுவீர் ......

அன்பினைப் பொழிந்திட ஆண்டவரே
அமைதியின் சொரூபமாய் அவதரித்தார்.....
இனிக் கண்களில் ஆனந்தக் கண்ணீரைத் தந்து
எக்காலமும் துணையாய் அவன் இருப்பான்.....

விண்ணவர் போற்றும் தேவனே இந்த
மண்ணில் மக்களைக் காத்திடுவான்
இனி எண்ணியதெல்லாம் ஈடேற
அந்த இறையருள் யாவர்க்கும் கிட்டட்டும் .....